2. தகவல் கோரல்

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்னை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி ; பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

திரு. கே. பண்ணை சேதுராம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்திருக்கக் கூடாது. ஒவ்வொருவராக எழுந்து கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, டெலிவிஷன் மீது உரிமைப்பிரச்னை கொடுத்திருக்கிறேன். 3-11-79-ஆம் தேதியன்று எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சில குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் பேசினார்கள். அந்தக் குற்றச் சாட்டுக்களைப்பற்றி ஆங்கிலத்தில் ஒன்றுமே சொல்லவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதித்த பிறகு தான் கனம் உறுப்பினரவர்கள் அதைப் படிக்க வேண்டும். என்ன ஆயிற்று என்று கேட்கலாமே தவிர, அதைப் படிக்கக் கூடாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்ன ஆயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என் ஆய்விலே இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே மது விலக்கு சம்பந்தமாக போலீஸ் கமிஷனர் அறிவித்தது சம்பந்தமாக அவர் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறேன். முதலமைச்சர் மீதும் ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறேன். அதை இப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம் மூன்று நாட்களுக்கு முன்பே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் பிரச்னைகளைப் பற்றிச் சொல்லாமல், தாம் கொடுத்த உரிமைப் பிரச்னை என்ன ஆயிற்று என்றுதான் கேட்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் வழக்கறிஞர், அவர்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும். அவர் எடுத்துச் சொன்ன உரிமை மீறல் பிரச்னைகள் என்னுடைய ஆய்விலே இருக்கிறது.

1979 நவம்பர் 5]

[முற்பகல் 10-30]

திரு. அ. ரகுமான்கான்: ஆய்வில் இருக்கிறது என்று சொன்னீர்கள், சரி. நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னால் கூட போதும் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்ல முடியாது, ஆய்வில் இருக்கிறது என்றால் அதற்கு உயிர் இருக்கிறது என்று பொருள், உட்காருங்கள். அடுத்து, திரு. பண்ணை சேதுராம் .. ..

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டமன்றத்தில்.. .. .. ..

திரு. அ. ரகுமான்கான்: இன்றே எடுத்துக்கொள்வதாக என்னிடத்தில் நேரிடையாகச் சொன்னீர்கள். உரிமைப் பிரச்னையைத் தள்ளிக் கொண்டே போனால் எப்படி? நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைக் கட்டாயப் படுத்த முடியாது, என்னைக் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆய்வில் இருக்கிறது, அமருங்கள். .. ..

திரு. அ. ரகுமான்கான்: சட்டசபை முடிவதற்குள்ளாவது எடுத்துச் கொள்வீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்ல முடியாது, என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். திரு. கே. பண்ணை சேதுராம்,

ஆ 'நீதியின் குரல்' பத்திரிகை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெறாதது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய நூலகத்தில் எல்லா தினசரி பத்திரிகைகளும் வந்து கொண்டிருக்கின்றன. (திரு. அ. ரகுமான்கான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்). இங்கே, அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்கிற பத்திரிகைகளும் .... (திரு. அ. ரகுமான்கான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் உங்களை உட்காரச் சொல்லுகிறேன். நீங்கள் பேசிக் கொண்டே இருந்தால், எப்படி? திரு. பண்ணை சேதுராம் பேசிக் கொண்டிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள். என் ஆய்விலே இருக்கிறது என்று நான் சொன்னவுடன் திரு. ரகுமான்கான் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும், உட்கார வேண்டும். இல்லையென்றால். அது நல்லதல்ல. சட்ட விதிகளைப் படித்து விட்டு, பிறகு என்னிடம் பேசுங்கள்.